# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2078/8 - 2018 ජූලි මස 02 වැනි සඳුදා - 2018.07.02

*2078/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(1) சமூக சுகாதார நிபுணத்துவ வைத்தியர் திரு. நிமல் சாந்த கமகெதர அவர்கள், தனது நிரந்தர பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக 2017.04.24 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதிற்கடமையாற்ற.

(2) ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எம். எம். விஜேனாயக அவர்கள் 2017.12.10 ஆந் திகதி முதல் 2017.12.13 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2017.12.10 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்குத் திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டி. கஜேந்திரன் குமார் அவர்கள், தனது நிரந்தர பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

(3) இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. கே. எஸ். எல். ராஜதாச அவர்கள், 2018.01.24 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கூட்டுறவு மற்றும் தமிழ்க் கல்வி (முஸ்லிம் பாடசாலைகள் தவிர) தொடர்பான அமைச்சின் செயலாளராக.

(4) இலங்கை கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எஸ். எம். கமகே அவர்கள், 2018.03.09 ஆந் திகதி முதல் ஊவா மாகாண கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக.

(5) இலங்கை கமத்தொழில் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஏ. எம். டி. அதபத்து அவர்கள், 2018.03.09 ஆந் திகதி முதல், பதுளை பிரதி கமத்தொழில் பணிப்பாளராக.


1A - PG 4098 — 57 (2018/07)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(6) இலங்கை கமத்தொழில் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஏ. எம். டி. அதுபத்து அவர்கள், தனது நிரந்தர பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக 2018.03.28 ஆந் திகதி முதல் ஊவா மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் மாகாண கமத்தொழில் பணிப்பாளராக பதிற் கடமையாற்ற.

(7) இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. பி. எம். கே. ஜீ. பண்டார அவர்கள் உடனடியாக செயற்படும் வகையில் (2018.05.14 ஆந் திகதி முதல்) பண்டாரவளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக.

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,
பதுளை,
2018, யூன் 05.

07-499

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.